1979 மார்ச் 15] *[திரு. கி. மனோகரன்]*

மாட்டு வண்டிகள் வேண்டாம் என்று சொன்ன காவல் துறையினர்மீது ஒழுங்கற்ற முறையில் கற்களை வீசினர். இதனால் ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர், மற்றும் 2 காவலர்கள் காயம் அடைந்தனர். ஒரு காவலர் ஆஸ்பத்திரியில் தங்கும் நோயாளியாக சிகிச்சை செய்யப்பட்டார். மற்ற இருவர் வெளி நோயாளிகளாக சிகிச்சை அடைந்தனர், கல் எரிந்த கூட்டத் தினரை போலீசார் துரத்தியபோது, குப்பமுத்து, அலிகான் என்னும் இரண்டு பேர்கள், பொதுமக்களில் காயம் அடைந்தனர். அவர்கள் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள்.

இதனால் பி-2 காவல் நிலையத்தினர் இ.பி.கோ. 147, 148, 332, 333, 337, 118 பிரிவுகளின்கீழ் குற்ற எண் 183/79—ல் ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். ஊர்வலத்தில் பதட்ட நிலைமை சுமார் 1.5 வரையில் நீடித்திருந்தது, இரவில்தான் அமைதி அடைந்தது. காவல் துறையினர் கூட்டத்தை திருத்து வதற்கு பிரம்பைத்தான் அவர்கள்மீது பயன்படுத்தினார்கள். தொடர்ந்து 13–3–1979 அன்று நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிலைமை அமைதியாகவே இருந்தது. எனவே, இவற்றைக் குறித்து விவாதிக்க மன்றத்தின் ஏனைய பிற அலுவல்கள் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதைக்குறித்து விவாதிக்க மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 11.20]

(4) அரசினர் தீர்மானம்

[விதி 23-யைத் தளர்த்தல்]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23—ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.